# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

15/05/2017

பெறுநர்
செய்தி ஆசிரியர்
தீக்கதிர் நாளிதழ்

அன்புடையீர்
வணக்கம்

கீழ்கண்ட பத்திரிக்கை செய்தியினை பத்திரிக்கையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி,

| | |
|---|---|
| தோழமையுள்ள | தோழமையுள்ள |
| **(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)** | **(எஸ்.இராஜேந்திரன்)** |
| தலைவர் | பொதுச்செயலாளர் |

---

# போராடும் போக்குவரத்து ஊழியர்களுக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு ஆதரவு!

போக்குவரத்து துறையை பொதுத்துறையாக பாதுகாத்து மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும் என்பன போன்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்து போராடும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது உள்ளார்ந்த ஆதரவை தெரிவித்துக்கொள்கிறது.

போக்குவரத்து தொழிலாளர்களிடம் பல்வேறு தரப்பின் கீழ் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.7000/- கோடியை துறையின் வேறு காரணங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய வைப்புநிதி, பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவைகள் ஓய்வு பெற்று பல மாதங்கள் கடந்த பின்னரும் கிடைக்க பெறாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்களின் அன்றாட வாழ்க்கையே கேள்விக்குறியாக மாற்றப்பட்டுள்ளது.

போக்குவரத்தில் வெள்ளை போர்டை மஞ்சளாக மாற்றுவது, மஞ்சளை வெள்ளையாக மாற்றுவது போன்ற நடவடிக்கையால் அறிவிக்கப்படாத போக்குவரத்து கட்டண உயர்வை பயணிகளின் மீது இந்த அரசு திணித்துள்ளது.

போக்குவரத்து துறையில் பல்லாயிரக்கணக்கான பதவிகள் நிரப்பப்படாமல் காலிப்பணி இடங்களாக கிடக்கின்றன. அதனால் ஓட்டுநர்களும், நடத்துனர்களும் ஓய்வேதுமின்றி பணியாற்றுகின்ற காரணத்தால் விபத்துகளும், மனித உயிர் இழப்புகளும் அன்றாட நிகழ்வுகளாக மாறி உள்ளது.

நாளும் ஏறி வருகின்ற விலைவாசி போன்றவைகளை எதிர்கொள்ளவும், போக்குவரத்து ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் ஏற்பட்டுள்ள முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1.09.2016 முதல் புதிய ஊதிய உயர்வு அளித்திருக்க வேண்டும். ஒன்பது மாதங்கள் கடந்த பின்னரும் உயிரோட்டமான பேச்சுவார்த்தை என்பது நடைபெறாத சூழ்நிலையில் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை தொடர்ச்சியாக நடத்தி ஒப்பந்தங்கண்டு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் என்றும் தமிழக அரசு சமூக நலத்திட்டங்களுக்காக அறிவிக்கும் அறிவிப்புகளுக்கு ஏற்படும் இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசு மானியமாக வழங்கிட வேண்டும் என்பன போன்ற நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடும் போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்தை வெற்றிபெற மின் ஊழியர் மத்திய அமைப்பு வாழ்த்துகிறது.

பயணிகள் நலன் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராடும் தொழிற்சங்கங்களை அழைத்து பேசி தீர்வு காண்பதற்கு பதிலாக 37 தொழிற்சங்கங்கள் ஆதரவாக உள்ளது. 10 தொழிற்சங்கங்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தை முறியடிப்போம் என்று மக்கள் பிரதிநிதியான மாண்புமிகு அமைச்சர் பொறுப்பற்ற முறையில் அறிவிப்பு செய்ததை தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு போராடும் போக்குவரத்து தொழிலாளர்களை அழைத்து பேசி தீர்வு கண்டிட வேண்டுமென தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு கேட்டுக்கொள்கிறது.